2017 ஜூலை 10]

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடியை அடுத்த மாதவரம் தொகுதி, மோரை ஊராட்சியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள், 100 தொழில்முனைவோர்களாக இணைந்து தொழிற்பூங்காவை உருவாக்கி இருக்கிறார்கள். இதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த ரூபாய் 15 கோடி infrastructure support (உட்கட்டமைப்புக்கான நிதி) கிடைக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். குறிப்பாக, Chennai Metropolitan Region அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்த இடமும் அதற்குக் கீழே வரப் போகிறது. எனவே, இருக்கிற Revenue Department classification பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிடும். அதனால் மீண்டும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து 3,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய அந்த மோரை தொழிற் பூங்காவிற்கு அம்மா அறிவித்த ரூபாய் 15 கோடி உதவித் தொகை கிடைக்க ஏற்பாடு செய்வாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை துறைரீதியாகப் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

168—

பேருந்து வசதி

***5862—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியிலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தரங்கம்பாடி–திருப்பதி வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி வழித்தடத்திலே பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போதுதான் முடிவு எடுக்க வேண்டியுள்ளது. எனவே, தற்போது இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலத்தை மறந்து, தமிழர் நலத்தையே நினைத்து, ஊர் வாழவே தன்னுயிரை உபயமாக்கிய உத்தமத் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் உள்ள தரங்கம்பாடி, வரலாற்றுப் புகழ் வாய்ந்த டேனிஷ்கோட்டை அமைந்துள்ள சுற்றுலாத் தலமாகும். ஓசோன் என்கின்ற அரியவகை காற்றும் இங்குதான் வீசுகிறது. இங்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வெளிநாடுகளில் இருந்தும், தமிழகத்திலிருந்தும் வருகிறார்கள். எனவே, இவர்கள் நலன் கருதியும், தொகுதி மக்கள் நலன் கருதியும் இங்கிருந்து திருப்பதிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையைப் பரிசீலித்து, அடுத்துவர இருக்கின்ற பேச்சுவார்த்தையின்போது, அந்தப் பகுதியிலே பேருந்து இயக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜுலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை ஏற்று, பரிசீலித்து குளிர்சாதனப் பேருந்து இயக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில், திட்டக்குடி போக்குவரத்துப் பணிமனை அமைந்துள்ளது. திட்டக்குடியிலிருந்து பல்வேறு கிராமங்களுக்கு 20 ஆண்டுகளுக்கு முன்பாக இயக்கப்பட்ட பல பேருந்துகள் தற்போது வசூல் இல்லை என்கின்ற காரணத்தினால் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்களும், பொதுமக்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே இயக்கப்பட்ட அந்தப் பேருந்துகளை எல்லாம் தொடர்ந்து இயக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, திட்டக்குடி—ஆலம்பாடி, திட்டக்குடி—ஆலத்தூர், திட்டக்குடி—பட்டாக்குறிச்சி, திட்டக்குடி—மங்களூர், திட்டக்குடி—சிறுபாக்கம், திட்டக்குடி—லட்சுமணபுரம், திட்டக்குடி—பனையநல்லூர், சின்னசேலம், அரசங்குடி, விருத்தாசலம் போன்ற பகுதிகளுக்குச் சென்று கொண்டிருந்த பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த வழித்தடங்களை ஆய்வு செய்து, அங்கு பேருந்துகளை இயக்குவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட திண்டிவனம்–மரக்காணம் சாலையில் பிரம்மதேசம் உள்ளது. இதன் அருகில் அரியந்தாங்கல், மடவந்தாங்கல், மண்டபெரும்பாக்கம், தென்னம்பூண்டி, குன்னப்பாக்கம், கீழ்மண்ணூர், வண்டராம்பூண்டி, கீழ்நெமிலி போன்ற 8 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 8 கிராமங்களுக்கும் போதிய பேருந்து வசதி இல்லை. அந்த 8 கிராமங்களிலும் உள்ள பொதுமக்களும் சரி, மாணவச் செல்வங்களும் சரி, அத்தியாவசியத் தேவைக்கு திண்டிவனம் அல்லது மரக்காணம் செல்ல வேண்டியுள்ளது. அப்படிச் செல்வதற்கும் பேருந்து வசதி இல்லாத காரணத்தினால், அவர்கள் 7 கி.மீ. தூரம் நடந்து வந்து, பிரம்மதேசத்திலிருந்துதான் பேருந்தைப் பிடிக்க வேண்டிய ஓர் அவல நிலை இருந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், 7 கி.மீ. தூரத்திற்குப் போதிய சாலை வசதி இருந்தும், பேருந்து வசதி இல்லை. எனவே, புதிய வழித்தடம்மூலம், பேருந்து வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சில ஊர்களைக் குறிப்பிட்டு பேருந்து வசதி இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அதுவும் 7 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உடனடியாக அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் இயங்கக்கூடிய பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வுக்கேற்ப, பேருந்து இயக்கத் தேவை ஏற்படுமாயின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.